அரசுசெயலாளர்/ மாற்றுத்திறனாளிகள்நலஇயக்குநர் (மு.கூ.பொ) சென்னை
அவர்களின் செயல்முறைநடவடிக்கைகள்
முன்னிலை: திரு.லால்வேனா இ.ஆ.ப.

நாள்:05.01.2022

செ.மு.ந.க.எண்.9796/மறுநி–1/2021

பொருள்: மாற்றுத் திறனாளிகள்நலஆணையரகம், சென்னை– அரசு மறுவாழ்வு இல்லங்கள் பிரிவு – சேலம் மாவட்டம், தேவியாக்குறிச்சி அரசு மறுவாழ்வு இல்லத்தில் கருணைஅடிப்படையில் 26.05.2020 மு.ப முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.அ.கிஷோர்குமார் என்பவருக்கு 26.05.2020 மு.ப முதல் பணிவரன் முறை முடித்தும் மற்றும் தகுதிகாண்பருவம் துவங்கியும் ஆணையிடப்படுகிறது.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.235, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) த்துறை நாள்.26.09.2013
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.01.08.2018
3. மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களின் செ.மு.ந.க.எண்.8224/நிர்2/2019, நாள்.13.03.2020.
4. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) த்துறை நாள்.23.01.2020

---

ஆணை:

பார்வை 3ல் கண்டசெயல் முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் பணிநியமனத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட காலிப் பணியிடங்களின் அடிப்படையிலும் இறந்த அரசு ஊழியர் திரு.அன்பழகன், அலுவலக உதவியாளர், அரசு மறுவாழ்வு இல்லம், உளுந்தூர்பேட்டை என்பவரது வாரிசுதாரர் திரு.அ.கிஷோர்குமார் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அடிப்படை பணியாளர் தொகுதி மற்றும் சார்நிலை பணிகளுக்கான விதிகள் பொது விதி 10(அ) 1ன்கீழ் தற்காலிக அடிப்படையில் சேலம் தேவியாக்குறிச்சி, அரசு மறுவாழ்வு இல்லத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்துவருகிறார்.

2) பார்வை 2மற்றும் 4ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர் பதவிக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு தேவையில்லை எனக் குறிப்பிட்டுள்ளதனைத் தொடர்ந்து, தற்காலிக பணியமைப்பு விதிகளின்படி தமிழ்நாடு அரசுபணியாளர் பணிநிபந்தனை சட்டம் 2016, பிரிவு 28(1) ன்படி இளநிலை உதவியாளர் பதவியில் 26.05.2020(மு.ப.) முதல் பணிவரன்முறை செய்தும், தொடர்ச்சியாக 3 ஆண்டு பணிக்காலத்தில் 2 ஆண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

3) தகுதிகாண் பருவத்தில் மேற்படி தனியர் கீழே குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்ச்சிபெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

(அ) அலுவலகநடைமுறைநூல் (DOM)
(ஆ) இளநிலைஉதவியாளருக்கானஅடிப்படைபயிற்சி

4) தனியரின் பணிப்பதிவேட்டில், தனியரின் பணிவரன்முறை செய்த விவரத்தின் பதிவுகள் மேற்கொள்ளுமாறு இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

(ஒம்) R.லால்வேனா
செயலாளர் / மாற்றுத்திறனாளிகள்நலஇயக்குநர் (மு.கூ.பொ)

//ஆணைப்படி//

உதவி தனி அலுவலர்(பொ)

பெறுநர்
திரு.அ. கிஷோர்குமார்
இளநிலைஉதவியாளர்,
அரசுமறுவாழ்வுஇல்லம் தேவியாகுறிச்சி
நகல்
1.நிர்வாக அலுவலர்(பொ)
அரசுமறுவாழ்வுஇல்லம், தேவியாகுறிச்சி
சேலம்.
2.அரசுசெயலாளர்
மாற்றுத்திறனாளிகள்நலத்துறை
தலைமைசெயலகம், சென்னை–9.
3.இருப்புக்கோப்பு/உதிரி .